# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.tn.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 80 / 2024**

திரு C.விஜயகுமார், S/o. M. சின்னராஜி,
VAO தெரு, தொண்டான் துளசி கிராமம்,
காட்பாடி தாலுக்கா,
வேலூர் மாவட்டம் – 632 202.

……..மேல்முறையீட்டாளர்
(திரு C. விஜயகுமார்)

எதிர்

1. உதவி மின்பொறியாளர்/ இ&ப/ லத்தேரி,
வேலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
LMC நகர், லத்தேரி – 632 202.

2. செயற்பொறியாளர்/ இ&ப/ காட்பாடி,
வேலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
10வது கிழக்கு மெயின் ரோடு, TNEB,
காந்தி ரோடு, வேலூர் – 632 007.

. . . எதிர்மனுதாரர்கள்
(திரு சிவசங்கர் ரெட்டி, உதவி மின்பொறியாளர்/ இ&ப/ லத்தேரி
திருமதி L. பரிமளா, செயற்பொறியாளர்/ இ&ப/ காட்பாடி)

**மனு பெறப்பட்ட நாள்: 22-11-2024**

**கேட்புரை நாள்: 09-01-2025**

**ஆணை நாள்: 22-01-2025**

22.11.2024 அன்று பெறப்பட்ட திரு C.விஜயகுமார், S/o. M. சின்னராஜி, VAO தெரு, தொண்டான் துளசி கிராமம், காட்பாடி தாலுக்கா, வேலூர் மாவட்டம் – 632 202 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 80/2024 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 09.01.2025 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

<u>**ஆணை**</u>

1. <u>**மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**</u>

தங்களுடைய விவசாய பட்டா நிலத்தில் புதியதாக அமைக்கப்பட்ட மின்பாதைகளை அகற்றுமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 <u>**வழக்கின் சுருக்கம்:**</u>

2.1 தங்களுடைய சர்வே எண் 210/5B–இல் உள்ள விவசாய பட்டா நிலத்தில் புதியதாக அமைக்கப்பட்ட மின்பாதைகளை அகற்றுமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேல்முறையீட்டாளரின் கோரிக்கை தொடர்பாக நிலத்தில் நடப்பட்டுள்ள மின்கம்பம் மற்றும் மின் பாதைகளை மாற்றி அமைக்க விரும்பினால் பங்களிப்பு திட்ட முறையில் விண்ணப்பம் அளித்து, அதற்குண்டான மதிப்பீட்டு தொகையை செலுத்தும் பட்சத்தில், நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மேல்முறையீட்டாளருக்கு உதவி மின்பொறியாளர்/ இ&ப/ லத்தேரி அவர்கள் தெரிவிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 தன்னுடைய நிலத்தில் தனது அனுமதியின்றி அமைக்கப்பட்ட மின்கம்பம் மற்றும் மின் பாதைகளை மாற்றி அமைத்து தருமாறு மேல்முறையீட்டாளர் 18.05.2024 அன்று வேலூர் மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், வேலூர் மின்பகிர்மான வட்டம் 19.10.2024 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில்

அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

**3.0 <u>மன்றத்தின் தீர்வு :</u>**

3.1 வேலூர் மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 19.10.2024 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"Heard the submission of both sides it is clear since from the year 2015 to till date, the respondent is enjoying the disputed place by erecting the two poles. Further, there is no evidence of objections made by the petitioner since from 2015 to till approaching this forum. Therefore the TamilNadu Electricity Distribution Code in vide Notification No.TNERC/DC/8-45 dated 17.02.2012 with effect from 21/03/2012 provides the licensee will have the right to use its supply lines and equipments provided under the condition above and to levy the cables under, across, over on through the consumer premises for supply to another premises in the neighbourhood.*
>
> *Therefore, the petitioner is here by directed to make an application to the Respondent regarding the shifting of poles according to the provisions of TNERC rules. Therefore, the petition has been disposed thereof."*

**4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:**

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 09.01.2025 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு C. விஜயகுமார் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு சிவசங்கர் ரெட்டி, உதவி மின்பொறியாளர்/ இ&ப/ லத்தேரி மற்றும் திருமதி L. பரிமளா, செயற்பொறியாளர்/ இ&ப/ காட்பாடி, வேலூர் மின் பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள்

சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மேற்கண்ட விலாசத்தில் தங்களது வீடு உள்ளதாகவும், இருவரும் இந்திய இராணுவத்தில் 20 ஆண்டுகளுக்கு மேலாக பணிபுரிந்து வருவதாகவும், அவர்கள் குடும்பத்தினருடன் இராணுவ குடியிருப்பில் இருந்து பணிபுரிந்து வருவதாகவும், வருடத்திற்கு 01 (அ) 02 முறை மேற்படி விலாசத்தில் உள்ள வீட்டிற்கு வந்து செல்வதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 மேற்படி விலாசத்தில் உள்ள தொண்டான்துளசி கிராமத்தில் தங்களுடைய பூர்வீகமான விவசாய நிலம் பட்டா எண்:749-ல் உள்ளதாகவும், இதே இடத்தில் பட்டா எண்: 383-ல் கிணறு உள்ளதாகவும், இதன் சர்வே எண்.210/5B ஆகும் என்றும், இந்த கிணற்றில் தனக்கு சொந்தமான விவசாய மின் இணைப்பு எண்:08-202-011-66 உள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 தான் விடுமுறையில் வீட்டிற்கு வந்து தன்னுடைய நிலத்தை பார்வையிடும் போது தன் விவசாய மின் இணைப்பு உள்ள மின் கம்பத்தில் இருந்து தனது விவசாய நிலத்தின் நடுவில் புதியதாக 02 மின் லைன் பாதைகள் அமைக்கப்பட்டதை பார்த்து மிகவும் அதிர்ச்சியும், மன உளைச்சலும் ஏற்பட்டதாகவும், இது குறித்து JE/லத்தேரி அவர்களிடம் முறையிட்டபோது நில உரிமையாளர் இடம் அனுமதி பெற அவசியம் இல்லை என தெரிவித்து தன் ஆட்சேபனையை நிராகரித்ததாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 பிறகு RTI –ன் மூலம் NOC பற்றி தகவல் EE/காட்பாடியிடம் கேட்கப்பட்டதாகவும், அதில் NOC இல்லாமல் யாருடைய சொந்த நிலத்திலும் மின்கம்பம், புதியதாக

மின்பாதைகள் அமைக்கப்படுவதில்லை என தெரிவிக்கப்பட்டிருந்ததாகவும், புகார் கடிதம் SE/வேலூர் அவர்களுக்கு பதிவு தபாலில் அனுப்பப்பட்டதாகவும், ஆனால் இது நாள் வரை எந்தவித பதிலும் வரவில்லை எனவும், ஆனால் பதில் அனுப்பப்பட்டதாக பொய்யான தகவல் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 SE/வேலூர் அவர்களிடம் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் கூட்டத்தில் கலந்து கொண்டு புகார் கடிதம் அளிக்கப்பட்டதாகவும், மற்றவர்களுக்கு சொந்தமான நிலத்தில் (NOC) ஒப்புதல் பெறாமல் மின்கம்பங்கள் மின் லைன் பாதைகள் அமைத்தால் அகற்றிட உத்திரவிட்ட மின்குறைதீர்ப்பாளர் நகல் இணைத்து கொடுக்கப்பட்டு முறையிடப்பட்டதாகவும், ஆனால் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 CGRF/SE/வேலூர் அவர்களிடம் முறையிடப்பட்டதாகவும், அங்கு அனைத்து விதமான ஆவணங்கள், தீர்ப்பு நகல்கள் அளித்து தங்களுடைய ஒப்புதல் இல்லாமல் (NOC) மின்கம்பங்கள், மின்பாதை அமைத்ததை அகற்றிட கோரியதாகவும், ஆனால் CGRF–ன் தீர்ப்பில் தங்களுடைய கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்

5.7 தங்கள் கிணற்றின் அருகே உள்ள மின் கம்பத்தில் இருந்து புதியதாக 02 மின் பாதைகள் நிலத்தின் நடுவே அமைக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் JE/லத்தேரி அவர்கள் வடபுறம் செல்லும் மின் லைன் பாதைகள் 2003–ல் இருந்து உள்ளது என பொய்யான தகவல் கூறியுள்ளதாகவும், ஆனால் இந்த மின் இணைப்புகள் திரு.நாமதேவ ரெட்டியார், வெங்கடேசன், நிலத்தின் அருகில் உள்ள Transformer–ல் இருந்ததை திரு.வெங்கடேசன் அவர்கள் சில வருடங்களுக்கு முன்பு அமைத்த கோழிப்பண்ணைக்கு மின் இணைப்பு வழங்க ஏதுவாக தங்கள் நிலத்தில் உள்ள விவசாய மின் இணைப்பு மின் கம்பத்தில் இருந்து வடபுறமாக செல்லும் மின் லைன் பாதையாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 மேலும் DCW செய்ய தாங்கள் பணம் செலுத்தினால் தான் லைன்கள் மாற்ற முடியும் என கூறியுள்ளதாகவும், தங்களுடைய அனுமதி இல்லாமல் மின்பாதைகள் அமைத்ததால் நிலத்தில் உள்ள வாழை மரங்கள் இலைகள் வெட்டப்பட்டுள்ளதாகவும்,

இதனால் மிகுந்த இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும், JE/லத்தேரி அவர்கள் 2015–ல் மின்பாதை அமைக்கும் போது நில உரிமையாளர் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என குறிப்பிட்டுள்ளதாகவும், தாங்கள் மற்றும் குடும்பத்தினர் வெளியூரில் (Indian Army Quarters) இருக்கும் போது எவ்வாறு ஆட்சேபனை தெரிவிக்க முடியும் என்றும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.9 தங்கள் அனுமதியின்றி மின்லைன் பாதைகள், மின் கம்பங்கள் நடப்பட்டதற்கு தாங்கள் ஏன் DCW–ன் பணம் செலுத்த வேண்டும் என்றும், இதனால் தங்களுக்கு மிகுந்த மன உளைச்சல் ஏற்பட்டுள்ளதாகவும், மின்குறைதீர்ப்பாளர் மேல்முறையீட்டு மனு எண்:65/2019–ன் தீர்ப்பின் படி –(11.06.2024) நில உரிமையாளர் அனுமதியின்றி அமைத்த மின்கம்பங்கள், மின் பாதைகள் அகற்றிவிடுமாறும் தங்களுக்கு ஏற்பட்டுள்ள மன உளைச்சலை விரைந்து நீக்குமாறும் நிலத்தின் உரிமையாளர்களான தங்களிடம் இருந்து எந்தவித ஒப்புதல் இல்லாமல் (NOC) மின்லைன் பாதைகள் அமைத்த பணியாளர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

## 6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 மேற்கண்ட புகாரில் பெறப்பட்ட மனுவில் திரு விஜய்குமார், தொண்டான்துளசி அவருக்கு சொந்தமான நிலத்தில் அவரது அனுமதியின்றி நடப்பட்டுள்ள மின் கம்பம் மற்றும் மின் கம்பிகளை அகற்றும் படி கோரியுள்ளதாகவும், இது சம்பந்தமாக ஏற்கனவே மேற்பார்வை பொறியாளரிடம் குறை தீர்வு நாள் கூட்டத்தில் அளித்த மனுவிற்கு உதவி மின்பொறியாளர்/இலத்தேரி அவர்கள் மூலம் மனுதாரருக்கு DCW முறையில் விண்ணப்பித்து மதிப்பீடு தொகை செலுத்திய பின் மின் கம்பங்கள் மற்றும் மின் பாதைகள் அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்ற பதிலும் அளிக்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 அதனை தொடர்ந்து மனுதாரர் மறுபடியும் CGRFல் மேற்கூறியது சம்பந்தமாகவே மனு அளித்ததற்கு அதிலும் DCW முறையில் நடவடிக்கை மேற்கொள்ளும்படியான ஆணை மேற்பார்வை பொறியாளர் / வேலூர் அவர்களால் மனுதாரருக்கு வழங்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 மேலும் மனுதாரர் இதன் தொடர்ச்சியாக மின் குறைத்தீர்ப்பாணையம் /சென்னையில் அளித்த மேல்முறையீட்டு மனு எண் 80/2024 அடிப்படையில் மின் குறைதீர்ப்பாளர்/சென்னை அவர்களின் க.எண்.த.நா.மி.கு/கோ.மனுஎண்.80/ 2024/அ.எண்.1718/2024 நாள் 02.12.2024 மூலம் வழங்கிய அறிவுறுத்தலின் படி மனுதாரரை (திரு நந்தகுமார்) நேரடியாக 13.12.2024 அன்று செயற்பொறியாளர்/ இ&ப/காட்பாடி அலுவலகத்திற்கு இசைவிணக்கம் செய்ய அழைத்த போது மனுதாரர் திரு.விஜய்குமார் அவர்கள் அவர்களுடைய நிலத்தில் இருக்கும் மின் கம்பங்கள் மற்றும் மின் பாதைகளை அவர்களது செலவில்லாமல் அப்புறப்படுத்தி தரும் படி கோரி எழுத்து மூலமாக விளக்கம் அளித்துள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 எனவே மனுதாரர் எந்த வகையிலும் இசைவில்லாமல் அவரது வழியில் உறுதியாக எந்தவிதத்திலும் மின்வாரியத்திற்கு பணம் செலுத்தாமல் அவரது நிலத்தில் உள்ள மின்கம்பங்கள் மற்றும் மின் பாதைகளை அகற்ற வேண்டும் என்பது அவரது நோக்கமாக உள்ளதாகவும், மேலும் மனுதாரரின் கோரிக்கையான திரு. நீலகண்டன் என்பவர் மின் இணைப்பிற்கு செல்லும் மின்கம்பங்கள் மற்றும் மின்பாதைகள் அகற்ற DCW மதிப்பீடு சுமார் ரூபாய் 11385/– ஆகும் மற்றும் திரு வெங்கடேசன் மற்றும் நாமதேவ ரெட்டி அவர்களுக்கு செல்லும் மின்கம்பம் மற்றும் மின்பாதை அகற்ற DCW மதிப்பீடு சுமார் ரூபாய் 93380/– ஆகும் எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 கடந்த 2003இல் தொண்டான்துளசி சார்ந்த திரு வெங்கடேசன் மற்றும் திரு நாமதேவர் ரெட்டி அவர்களுக்கு வழங்கப்பட்ட விவசாய மின் இணைப்பிற்கான மின் பாதைகள் மற்றும் 2015 ஆம் ஆண்டு தொண்டான்துளசி கிராமத்தைச் சேர்ந்த திரு. நீலகண்டன் அவர்களுக்கு விவசாய மின் இணைப்பு வழங்கிய போது நடப்பட்ட மின்கம்பங்கள் மற்றும் மின்பாதைகள் பட்டா எண் 749 இல் உள்ள நிலத்தின் வழியாக அமைத்த போது அதன் உரிமையாளர் திரு சின்னராஜி என்பவர் எந்தவித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என்றும் மேலும் கடந்த 2018 ஆம் ஆண்டு தான் திரு சின்னராஜி என்பவர் அவருக்கு சொந்தமான பட்டா எண் 749 நிலத்தினை பாகப்பிரிவினை மூலம் அவர்களது மகன்களான திரு விஜயகுமார் மற்றும் திரு நந்தகுமார் ஆகியோருக்கு பிரித்துக் கொடுத்துள்ளதாகவும், 2003 மற்றும் 2015ல் அமைக்கப்பட்ட மின்கம்பங்கள் மற்றும் மின்பாதைகளை 2018க்கு பின்பு

உரிமைதாரர்களாக மாறிய திரு விஜயகுமார் மற்றும் திரு நந்தகுமார் ஆகியோர்கள் ஆட்சேபனை செய்து வருவதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 மின் இணைப்பு விவசாய நிலங்களுக்கு வழங்கும் பட்சத்தில் மின்பாதைகள் விவசாய நிலங்கள் வழியாகத்தான் வழங்க முடியும் என்பதால் கடந்த 2003 மற்றும் 2015 ல் திரு வெங்கடேசன் திரு நாமதேவ ரெட்டி மற்றும் திரு நீலகண்டன் அவர்களுக்கு விவசாய மின் இணைப்பு வழங்க திரு சின்னராஜி (மனுதாரரின் தந்தை) அவர்களுக்கு சொந்தமான பட்டா என் 749 இல் அமைக்கப்பட்ட மின் கம்பங்கள் மற்றும் மின் பாதைகள் மாற்றி அமைக்க கோரும் தற்போதைய நில உரிமையாளர்கள் திரு விஜய் குமார் மற்றும் திரு நந்தகுமார் (மேல்முறையீட்டாளர்கள்)ன் கோரிக்கை TNERC Supply Code Regulation (6)–ன் படி பங்கீட்டு வைப்பு தொகை திட்டத்தின் வாயிலாக விண்ணப்பித்து விண்ணப்பத்தின் பேரில் மதிப்பீடு தயார் செய்து மதிப்பீடு கட்டணம் செலுத்தும் பட்சத்தில் கம்பம் மற்றும் மின் பாதையை தொழில் நுட்ப சாத்தியகூறுகள் அடிப்படையில் மாற்றி தர இயலும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் மேற்கண்ட விலாசத்தில் தங்களது வீடு உள்ளதாகவும், அவர்கள் குடும்பத்தினருடன் இராணுவ குடியிருப்பில் இருந்து பணிபுரிந்து வருவதாகவும், வருடத்திற்கு 01 (அ) 02 முறை மேற்படி விலாசத்தில் உள்ள வீட்டிற்கு வந்து செல்வதாகவும், மேற்படி விலாசத்தில் உள்ள தொண்டான்துளசி கிராமத்தில் தங்களுடைய பூர்வீகமான விவசாய நிலம் பட்டா எண்:749–ல் உள்ளதாகவும், இதே இடத்தில் பட்டா எண்: 383–ல் கிணறு உள்ளதாகவும், இதன் சர்வே எண்.210/5B ஆகும் என்றும், இந்த கிணற்றில் தனக்கு சொந்தமான விவசாய மின் இணைப்பு எண்:08–202–011–66 உள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.3 தான் விடுமுறையில் வீட்டிற்கு வந்து தன்னுடைய நிலத்தை பார்வையிடும் போது தன் விவசாய மின் இணைப்பு உள்ள மின் கம்பத்தில் இருந்து தனது விவசாய நிலத்தின்

நடுவில் புதியதாக 02 மின் லைன் பாதைகள் அமைக்கப்பட்டதை பார்த்து மிகவும் அதிர்ச்சியும், மன உளைச்சலும் ஏற்பட்டதாகவும், இது குறித்து JE/லத்தேரி அவர்களிடம் முறையிட்டபோது நில உரிமையாளர் இடம் அனுமதி பெற அவசியம் இல்லை என தெரிவித்து தன் ஆட்சேபனையை நிராகரித்ததாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.4 CGRF/SE/வேலூர் அவர்களிடம் முறையிடப்பட்டதாகவும், அங்கு அனைத்து விதமான ஆவணங்கள், தீர்ப்பு நகல்கள் அளித்து தங்களுடைய ஒப்புதல் இல்லாமல் (NOC) மின்கம்பங்கள், மின்பாதை அமைத்ததை அகற்றிட கோரியதாகவும், ஆனால் CGRF–ன் தீர்ப்பில் தங்களுடைய கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்

7.5 மேலும் DCW செய்ய தாங்கள் பணம் செலுத்தினால் தான் லைன்கள் மாற்ற முடியும் என கூறியுள்ளதாகவும், தங்களுடைய அனுமதி இல்லாமல் மின்பாதைகள் அமைத்ததால் நிலத்தில் உள்ள வாழை மரங்கள் இலைகள் வெட்டப்பட்டுள்ளதாகவும், இதனால் மிகுந்த இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும், JE/லத்தேரி அவர்கள் 2015–ல் மின்பாதை அமைக்கும் போது நில உரிமையாளர் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என குறிப்பிட்டுள்ளதாகவும், தாங்கள் மற்றும் குடும்பத்தினர் வெளியூரில் (Indian Army Quarters) இருக்கும் போது எவ்வாறு ஆட்சேபனை தெரிவிக்க முடியும் என்றும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.6 தங்கள் அனுமதியின்றி மின்லைன் பாதைகள், மின் கம்பங்கள் நடப்பட்டதற்கு தாங்கள் ஏன் DCW–ன் பணம் செலுத்த வேண்டும் என்றும், இதனால் தங்களுக்கு மிகுந்த மன உளைச்சல் ஏற்பட்டுள்ளதாகவும், தங்களுக்கு ஏற்பட்டுள்ள மன உளைச்சலை விரைந்து நீக்குமாறும் நிலத்தின் உரிமையாளர்களான தங்களிடம் இருந்து எந்தவித ஒப்புதல் இல்லாமல் (NOC) மின்லைன் பாதைகள் அமைத்த பணியாளர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.7 எதிர்மனுதாரர் தனது வாதுரையில் திரு விஜய்குமார் அவருக்கு சொந்தமான நிலத்தில் அவரது அனுமதியின்றி நடப்பட்டுள்ள மின் கம்பம் மற்றும் மின் கம்பிகளை அகற்றும் படி கோரியுள்ளதாகவும், இது சம்பந்தமாக ஏற்கனவே குறை தீர்வு நாள்

கூட்டத்தில் அளித்த மனுவிற்கு DCW முறையில் விண்ணப்பித்து மதிப்பீடு தொகை செலுத்திய பின் மின் கம்பங்கள் மற்றும் மின் பாதைகள் அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்ற பதிலும் அளிக்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.8 கடந்த 2003இல் தொண்டான்துளசி சார்ந்த திரு வெங்கடேசன் மற்றும் திரு நாமதேவர் ரெட்டி அவர்களுக்கு வழங்கப்பட்ட விவசாய மின் இணைப்பிற்கான மின் பாதைகள் மற்றும் 2015 ஆம் ஆண்டு தொண்டான்துளசி கிராமத்தைச் சேர்ந்த திரு. நீலகண்டன் அவர்களுக்கு விவசாய மின் இணைப்பு வழங்கிய போது நடப்பட்ட மின்கம்பங்கள் மற்றும் மின்பாதைகள் பட்டா எண் 749 இல் உள்ள நிலத்தின் வழியாக அமைத்த போது அதன் உரிமையாளர் திரு சின்னராஜி என்பவர் எந்தவித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என்றும் மேலும் கடந்த 2018 ஆம் ஆண்டு தான் திரு சின்னராஜி என்பவர் அவருக்கு சொந்தமான பட்டா எண் 749 நிலத்தினை பாகப்பிரிவினை மூலம் அவர்களது மகன்களான திரு விஜயகுமார் மற்றும் திரு நந்தகுமார் ஆகியோருக்கு பிரித்துக் கொடுத்துள்ளதாகவும், 2003 மற்றும் 2015ல் அமைக்கப்பட்ட மின்கம்பங்கள் மற்றும் மின்பாதைகளை 2018க்கு பின்பு உரிமைதாரர்களாக மாறிய திரு விஜயகுமார் மற்றும் திரு நந்தகுமார் ஆகியோர்கள் ஆட்சேபனை செய்து வருவதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.9 மின் இணைப்பு விவசாய நிலங்களுக்கு வழங்கும் பட்சத்தில் மின்பாதைகள் விவசாய நிலங்கள் வழியாகத்தான் வழங்க முடியும் என்பதால் கடந்த 2003 மற்றும் 2015 ல் திரு வெங்கடேசன் திரு நாமதேவ ரெட்டி மற்றும் திரு நீலகண்டன் அவர்களுக்கு விவசாய மின் இணைப்பு வழங்க திரு சின்னராஜி (மனுதாரரின் தந்தை) அவர்களுக்கு சொந்தமான பட்டா என் 749 இல் அமைக்கப்பட்ட மின் கம்பங்கள் மற்றும் மின் பாதைகள் மாற்றி அமைக்க கோரும் தற்போதைய நில உரிமையாளர்கள் திரு விஜய் குமார் மற்றும் திரு நந்தகுமார் (மேல்முறையீட்டாளர்கள்)ன் கோரிக்கை TNERC Supply Code Regulation (6)–ன் படி பங்கீட்டு வைப்பு தொகை திட்டத்தின் வாயிலாக விண்ணப்பித்து விண்ணப்பத்தின் பேரில் மதிப்பீடு தயார் செய்து மதிப்பீடு கட்டணம் செலுத்தும் பட்சத்தில் கம்பம் மற்றும் மின் பாதையை தொழில் நுட்ப சாத்தியகூறுகள் அடிப்படையில் மாற்றி தர இயலும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.10 இது சம்பந்தமாக மின்சார சட்டம், 2003–இன் 68 (1), (2)(a) விதித் தொகுப்புகளில் கூறப்பட்டுள்ள வரையறைகளை ஆராய விரும்புகின்றேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"68. Overhead lines*
*(1) An overhead line shall, with prior approval of the Approprite Government, be installed or kept installed above ground in accordance with the provisions of sub-section (2).*
*(2) The provisions contained in sub-section (1) shall not apply–*
*(a) in relation to an electric line which has a nominal voltage not exceeding 11 kilovolts and is used or intended to be used for supplying to a single consumer".*

மேற்கூறிய மின்சார சட்டம் 68(2)(a)–இன்படி ஒரு தனிநபருக்கு மின்சாரம் வழங்கும் நேர்வில் 11 KV–க்குள் இருக்கும்பட்சத்தில் அரசாங்கத்திடமிருந்து அனுமதி பெற வேண்டியது அவசியமில்லை என தெரியவருகிறது.

7.11 இவ்வழக்கு சம்பந்தமாக மின்சார சட்டம், 2003–இல் மின்கம்பம், மின்பாதை மற்றும் மின்மாற்றி போன்ற மின்தளவாடங்களை அமைக்கும் பணிகளை செய்வதற்கு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்திற்கு உள்ள அதிகார விதிமுறைகளை ஆராய விரும்புகிறேன்.

*"The works of Licensees Rules, 2006*
*3. Licensee to carry our works:*
*(1) A Licensee may–*
*(a) carry out works, lay down or place any electric supply line or other works in, through, or against, any building, or on, over or under any land whereon, whereover or whereunder any electric supply–line or works has not already been lawfully laid down or placed by such licensee, with the prior consent of the owner or occupier of any building or land;*
*(b) fix any support of overhead line or any stat or strut required for the purpose of securing in position any aupport of any overhead line on any building or land or having been so fixed, may alter such support:*
*Provided that in case where the owner or occupier of the building or land raised objections in respect of works to be carried out under this rule, the licensee shall obtain permission in writing from the District Magistrate of the Commissioner of Police or any other officer authorized by the State Government in this behalf, for carrying out the works:*
*Provided further that if at any time, the owner or occupier of any building or land on which any works have been carried out or any support of an overhad line, stay of strut has been fixed shows sufficient cause, the District Magistrate of the Commissioner of Police, or the*

*officer authorized may by order in writing direct for any such works, support, stay or strut to be removed or altered.*

*xxx*

*xxx*

*(3) Nothing contained in this rule shall effect the powers conferred upon any licensee under section 164 of the Act."*

மேற்கூறிய விதிப்படி மின்சாரச் சட்டத்தின் 164வது பிரிவுதான் *The works of Licensees Rules, 2006 ஐ விட* உச்சமானது என்பது தெளிவாகிறது.

7.12 எனவே, இந்திய மின்சார சட்டம், பிரிவு 164 மற்றும் தந்தி தொலை தொடர்பு சட்டம் 1885–இல் கூறப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் மேற்கொண்டு மின்கம்பங்கள் மற்றும் மின்பாதை அமைப்பதற்கு உரிமதாரருக்கு வழங்கப்பட்ட உரிமைகளை ஆராய விரும்புகிறேன். அவ்விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***" 164. Exercise of pwers of Telegraph Authority in Certain cases-***

*164. Exercise of powers of Telegraph Authority in certain cases. The Appropriate Government may, by order in writing, for the placing of electric lines or electrical plant for the transmission of electricity or for the purpose of telephonic or telegraphic communications necessary for the proper co- ordination of works, confer upon any public officer, licensee or any other person engaged in the business of supplying electricity under this Act, subject to such conditions and restrictions, if any, as the Appropriate Government may think fit to impose and to the provisions of the Indian Telegraph Act, 1885 (13 of 1885), any of the powers which the telegraph authority possesses under that Act with respect to the placing of telegraph lines and sts for the posts purposes of a telegraph est established or maintained, by the Government or to be so established or maintained."*

***"Part III***
***Power to Place Telegraph Lines and Posts***
***10. Power for telegraph authority to place and maintain telegraph lines and posts:-***

*The telegraph authority may, from time to time, place and maintain a telegraph line under, over, along, or across, and posts in or upon any immovable property:*

*Provided that:-*

1. *The telegraph authority shall not exercise the powers conferred by this section except for the purposes of a telegraph established or maintained by the [Central Government], or to be so established or maintained.*
2. *The [Central Government] shall not acquire any right other than that of user only in the property under, over, along, across in or upon which the telegraph authority places any telegraph line or post; and*

3. *Except as hereinafter provided, the telegraph authority shall not exercise those powers in respect of any property vested in or under the control or management of any local authority, without the permission of that authority; and*

4. *In the exercise of the powers conferred by this section, the telegraph authority shall do as little damage as possible, and, when it has exercised those powers in respect of any property other than that referred to in clause (c), shall pay full compensation to all persons interested for any damage sustained by them by reason of the exercise of those powers. "*

7.13 மேற்கண்டுள்ள இந்திய மின்சார சட்டம், பிரிவு 68, 164 மற்றும் இந்திய தொலைத்தொடர்பு சட்டம் 1885–இன் பிரிவு 10–இன்படி மின்கம்பமோ அல்லது மின்பாதையையோ எந்த ஒரு நிலத்திலும் அமைப்பதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய விதிமுறைகளின்படி உரிமதாரர் மின்பயன் பெற உரிமை கோரும் நுகர்வோருக்கு மின்பாதை அமைக்க உரிமையுள்ளது என தெரியவருகிறது.

7.14 மேலும், எதிர்மனுதாரரின் வாதுரையிலிருந்து மேல்முறையீட்டில் குறிப்பிட்டுள்ள தாழ்வழுத்த மின்பாதையானது சுமார் 20 வருடங்களுக்கு முன்பு நிறுவப்பட்டது என்பதும், அம்மின்பாதை அமைக்கப்பட்ட காலகட்டத்தில் எவ்வித ஆட்சேபணையும் பெறப்படவில்லை என்பதும் மேலும் மின் இணைப்பு விவசாய நிலங்களுக்கு வழங்கும் பட்சத்தில் மின்பாதை நிலங்கள் வழியாகதான் வழங்க முடியும் என்பதாலும், தற்பொழுது பெரும்பாண்மை விவசாய நிலங்களின் பயன்பாட்டிற்காக பராமரிக்கப்பட்டுவரும் தாழ்வழுத்த மின்பாதையை மாற்றித்தர கோரும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை TNERC Supply Code Regulation 6–ன்படி – பங்கீட்டு வைப்புத்தொகை திட்டத்தின் வாயிலாக விண்ணப்பிக்குமாறும், விண்ணப்பத்தின்பேரில் மதிப்பீடு தயார் செய்து மதிப்பீட்டுக் கட்டணம் செலுத்தும்பட்சத்தில் மின்பாதையை மாற்றிதர இயலும் என்ற எதிர்மனுதாரரின் வாதம் ஏற்று கொள்ளப்பட்டு மேல்முறையீட்டாளரின் கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது.

7.15 இருப்பினும் மேல்முறையீட்டாளர் மின்பாதையை மாற்றி அமைக்க விரும்பும் பட்சத்தில் மின்பாதை இடமாற்றம் செய்ய ஆகும் மதிப்பீட்டு செலவு யாரை சாறும் என்பதை அறிய தமிழ்நாடு மின்சார வழங்கல் விதி தொகுப்பு விதி 6–ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***"மின்இணைப்பு/மின்தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் மாற்றல் கட்டணம்:***

*(1) மின்னிணைப்பு / மின்தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் இடமாற்றுவதற்கான கட்டணத்தை நுகர்வோரே ஏற்க வேண்டும். மதிப்பீடு செய்யப்பட்ட இடமாற்றத் தொகையை நுகர்வோர் முழுமையாக முன் கூட்டியே கட்டிவிட வேண்டும். மதிப்பீட்டின் நகல் நுகர்வோருக்கு வழங்க வேண்டும். அத்தொகை செலுத்தப்பட்ட பின்னரே இடமாற்ற பணி மேற்கொள்ளப்படும். "*

7.16 மேற்கூறிய விதியை ஆராயும்போது பாதுகாப்பாக நிறுவப்பட்ட நிலையிலிருந்து மின்பாதையை இடமாற்றம் செய்ய மேல்முறையீட்டாளர் கோரும்பட்சத்தில் உரிய மதிப்பீட்டு தொகையை மேல்முறையீட்டாளர் செலுத்த வேண்டும் என்பது தெரிய வருகிறது.

**8.0 <u>முடிவுரை:</u>**

8.1 மேற்கூறிய பத்திகளில் உள்ள தீர்வின்படி, மேல்முறையீட்டாளர் 20 வருடங்களுக்கு முன்பே அமைக்கப்பட்ட தாழ்வழுத்த மின்பாதையை மாற்ற விரும்பினால் தமிழ்நாடு மின் பகிர்மான விதிமுறைகளின் படி மின்பாதையை மாற்றியமைப்பதற்கு ஆகும் உரிய தொகையை செலுத்தும்பட்சத்தில் மின்பாதையை தொழில்நுட்ப சாத்திய கூறுகளின் அடிப்படையில் மாற்றியமைக்க எதிர்மனுதாரருக்கு உத்திரவிடப்படுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 80/2024 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>

1. திரு C.விஜயகுமார், S/o. M. சின்னராஜி, - By RPAD
VAO தெரு, தொண்டான் துளசி கிராமம்,
காட்பாடி தாலுக்கா,
வேலூர் மாவட்டம் – 632 202.

2. உதவி மின்பொறியாளர்/ இ&ப/ லத்தேரி,
வேலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
LMC நகர், லத்தேரி – 632 202.

3. செயற்பொறியாளர்/ இ&ப/ காட்பாடி,
வேலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
10வது கிழக்கு மெயின் ரோடு, TNEB,
காந்தி ரோடு, வேலூர் – 632 007.

4. மேற்பார்வை பொறியாளர், – By Email
**வேலூர்** மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
**10**வது கிழக்கு மெயின் ரோடு,
காந்தி நகர், வேலூர்–**632 006.**

5. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

6. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

7. உதவி இயக்குநர் (கணினி) – **தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.